## வீதித் துறை உதவிச் செயற்திட்டம் - கிராமிய வீதி ஒத்திகைக் கூறு - 2014

வீதித் துறை உதவிச் செயற்திட்டம் - கிராமிய வீதி ஒத்திகைக் கூறின் 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் (ஜீஓஎஸ்எல்) சர்வதேச அபிவிருத்தி சங்கத்திற்கும் (ஐடீஏ) இடையே கைச்சாத்திடப்பட்ட 2006 சனவரி 16 ஆந் திகதிய 4138 சீஈ ஆம் இலக்க அபிவிருத்தி கடன் உடன்படிக்கையின் IV ஆம் உறுப்புரையின் 4.01(பீ) பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

### 1.2 செயற்திட்ட அமுலாக்கல், குறிக்கோள்கள், நிதியிடல் மற்றும் செயற்திட்டக் காலம்

வீதித் துறை உதவிச் செயற்திட்ட அபிவிருத்தி கடன் உடன்படிக்கையின் படி, தற்போது மாகாண சபைகள் மற்றும் பிரதேச அபிவிருத்தி அமைச்சாகவுள்ள உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சு செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவராக உள்ளது. பின்வருவன அடங்கலாக மாகாண சபைகளிற்கான மூன்று ஒப்பந்தங்களினதும் பிரதேச சபைகளிற்கான ஒன்பது ஒப்பந்தங்களினதும் கீழ் ஒத்திகை நிகழ்ச்சித்திட்டங்களை மேற்கொள்வதே செயற்திட்டத்தின் பிரதான குறிக்கோளாகும்.

(அ) கிராமிய வீதி முகாமைத்துவத்தினையும் பிரதேச சபைகளின் பேணுகை முறைமையினையும் பலப்படுத்தல்.

(ஆ) நுழைவாற்றலில் கிராமிய வீதிகளை முன்னேற்றுவதற்காக கிரமிய வீதிகளில் ஏறத்தாழ 160 கிலோமீற்றர்களை புனரமைத்து பேணிவருதல்.

(இ) கிராமிய வீதி முகாமைத்துவம், பிரதேச சபைகளால் மேற்கொள்ளப்படவுள்ள செயற்திட்டங்களின் பராமரித்தல் முறைமை, ஒப்பந்த முகாமைத்துவம் மற்றும் ஒப்பந்த மேற்பார்வை என்பவற்றின் பலப்படுத்தல் அடங்கலான தொழில்நுட்ப உதவிகளை வழங்குதல்.

(ஈ) உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சின் பதவியணியினர், மாகாண சபைகளினதும் பிரதேச சபைகளினதும் செயற்திட்ட பதவியணியினர், ஒப்பந்தகாரர்கள், மதியுரைஞர்களின் இயலளவைக் கட்டியெழுப்புதல் அடங்கலான பயிற்சிகளும் நிறுவக ரீதியான பலப்படுத்தல்களும்.

(உ) செயற்திட்டத்தின் பகுதி பீ இற்கான சுதந்திர தொழில்நுட்ப கணக்காய்வினை பொறுப்பேற்றல்; மற்றும்

(ஊ) செயற்திட்டத்தின் பகுதி பீ இற்குத் தேவையான பொருட்களையும் உபகரணங்களையும் வழங்குதல்.

கடன் உடன்படிக்கையின்படி செயற்திட்டத்தின் மொத்த மதிப்பீட்டுக் கிரயம் முறையே ரூபா 1,657 மில்லியனுக்குச் சமனான ஐ.அ.டொ. 14.61 மில்லியனாவதுடன் அதில் ரூபா 1,632 மில்லியனுக்குச் சமனான ஐ.அ.டொ. 14.40 மில்லியன் தொகையை வழங்குவதற்கு சர்வதேச அபிவிருத்தி சங்கம் இணங்கியிருந்தது. செயற்திட்டம் அதன் செயற்பாடுகளை 2006

மே 01 இல் தொடங்கியிருந்ததுடன் 2011 மார்ச் 31 அளவில் முடிவுறுத்துவதற்கு பட்டியலிடப்பட்டுள்ளது. அதனைத்தொடர்ந்து, செயற்திட்டக் காலம் 2014 செப்தம்பர் 30 வரை காலநீடிப்புச் செய்யப்பட்டது. இருப்பினும், 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டன.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.4 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன. நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்திற் கொள்கின்றாரேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்திற்கொள்ளவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டு மொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன். பின்வருவனவற்றை மதிப்பிடுவதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட அவ்வாறான செவ்வையினையும் அப் பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

(அ) செயற்திட்ட முகாமைத்துவத்தின் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும் செயற்திட்டத்தின் செயற்பாடுகள் தொடர்பான ஏடுகள், பதிவேடுகள், முதலியவற்றின் நம்பகத்தன்மையும் நிச்சயப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட செலவினங்கள் செயற்திட்டத்தினால் பேணப்பட்ட மேம்படுத்திய நிதி அறிக்கைகள் மற்றும் செயன்முன்னேற்ற அறிக்கைகளுடன் திருப்திகரமாக கணக்கிணக்கம் செய்யப்பட்டிருந்தனவா என்பதும்,

(இ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடன்வழங்கும் முகவர் என்பவற்றின் நிதிகளிலிருந்தான செயற்திட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து உருவாகிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், கடன் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைத் தொடர்ந்து செல்லும் அடிப்படையில் காட்டும் வண்ணம் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) கடனின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்கள் அபிவிருத்திக் கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட விதப்புரைகளுக்கிணங்க இருந்தனவா என்பதும்,

(உ) கடனின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள் மற்றும் உபகரணங்கள் என்பன செயற்திட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டுள்ளனவா என்பதும்,

(ஊ) செயற்திட்டத்தின் அமுல்படுத்தலுக்காகக் கடைப்பிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்

(எ) நிதிக்கூற்றுக்களானவை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஏ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் குறிப்படப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

(ஐ) அபிவிருத்திக் கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தனவா என்பதும் ஆகும்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

இது வரையான எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமைய,

(அ) செயற்திட்டமானது 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கு முறையான கணக்கேடுகளைப் பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு அமைய 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் காட்டுகின்றன என்றும்,

(ஆ) வழங்கப்பட்ட செய்யப்பட்ட நிதிகள் அவை வழங்கப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் (எஸ்ஓஈ) மீளளித்தல்களிற்கு ஆதாரமானவையாக அபிவிருத்திக் கடன் உடன்படிக்கையில் விதந்துரைக்கப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் காணப்பட்டிருந்தன என்றும்,

(ஈ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் குறிப்படப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும்,

(உ) அபிவிருத்திக் கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தன என்றும்

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 3. நிதிசார் மற்றும் பௌதீக செயலாற்றல்

### 3.1 நிதிகளின் பயன்பாடு

மீளாய்வாண்டிற்கான நிதியங்களின் நிதியளிப்பு, பாதீட்டு ஏற்பாடு மற்றும் மீளாய்வாண்டிலும் 2014 திசெம்பர் 31 வரையிலுமான நிதிகளின் பயன்பாடு என்பற்றுடன் தொடர்புடைய சில முக்கியமான புள்ளிவிபரங்கள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

| மூலங்கள் | அபிவிருத்தி கடன் உடன்படிக்கையில் நிதியளிப்பதற்காக இணங்கப்பட்ட தொகை | | 2014 ஆம் ஆண்டிற்கான பாதீட்டு ஏற்பாடு | | பயன்படுத்திய நிதிகள் - மீளாய்வாண்டின் போது | | பயன்படுத்திய நிதிகள் - 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | ஐ.அ.டொ. மில். | ரூபா மில். | ஐ.அ.டொ. மில். | ரூபா மில். | ஐ.அ.டொ. மில். | ரூபா மில். | ஐ.அ.டொ. மில். | ரூபா மில். |
| ஐடீஏ | 14.40 | 1,632 | 0.08 | 10.05 | 0.08 | 10.50 | 14.40 | 1,632.50 |
| ஜீஓஎஸ்எல் | 0.21 | 25 | - | 0.5 | - | 0.37 | 0.17 | 19.50 |
| மொத்தம் | 14.61 | 1,657 | 0.08 | 10.55 | 0.08 | 10.87 | 14.57 | 1,652.00 |

### 3.2 பௌதீக செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கிடைக்கப்பெற்ற தகவல்களின் படி, முறையே 69 கிலோமீற்றர்கள், 46 கிலோமீற்றர்கள் மற்றும் 46.4 கிலோ மீற்றர்கள் நீளமுடைய ஊவா மாகாணம், வட மத்திய மாகாணம் மற்றும் தென் மாகாணங்களிலுள்ள கிராமிய வீதிகளின் புனரமைப்பு வேலைகளை 2011 திசெம்பர் 31 அளவில் செயற்திட்டம் பூரணப்படுத்தியிருந்தது. செயற்திட்டம் தொடர்ந்துவரும் காலப்பகுதிக்காக

செயல்நடவடிக்கைத் திட்டமொன்று இல்லாமல் 2014 செப்தெம்பர் 30 வரை செயற்பாடுகளை தொடர்ச்சியாக மேற்கொண்டிருந்தது. மாகாண சபைகள் மற்றும் பிரதேச அபிவிருத்தி அமைச்சின் செயலாளரின் கருத்துப்படி, தொடர்ந்துவரும் காலப்பகுதியில் விழிப்புணர்ச்சி நிகழ்ச்சித் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் அதற்காக செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கிடைக்கப்பெற்ற தகவல்களின் படி, 2011 திசெம்பர் அளவில் பூரணப்படுத்தப்பட்டிருந்த தென் மாகாணத்திலுள்ள மில்லவ-தொலபோவில வீதி, வேவகம-குடா இடிவெவ மாவத்தை வீதி சனாதிபதி மாவத்தை ஆகிய வேலைப் பரப்பெல்லையின் முரண்களின் பெறுமதி முறையே 90.2 சதவீதம், 62.88 சதவீதம் மற்றும் 49.42 சதவீதத்தினால் மிகைத்திருந்தன. இருப்பினும், அவ்வாறான முரண்களுக்கான காரணங்கள் மற்றும் கேள்விச் சபை அங்கீகாரங்கள் முதலியன கணக்காய்விற்கு கிடைக்கவில்லை. மாகாண சபைகள் மற்றும் பிரதேச அபிவிருத்தி அமைச்சின் செயலாளரின் விளக்கமளித்தலின் படி, இந் நோக்கத்திற்காக தென் மாகாண சபையின் அங்கீகாரம் 2012 செப்தெம்பர் 20 ஆந் திகதி கிடைத்திருந்தது.

(இ) கிராமிய வீதிகளை பராமரிப்பதற்கான கையேடு தயாரிக்கப்பட்டு மாகாண சபைகளிடையே பகிர்ந்தளிக்கப்பட்டிருந்த போதிலும், கையேட்டினால் பிரேரிக்கப்பட்ட வீதி பராமரித்தல் நடைமுறைகளை அமுல்படுத்துவதற்காகவும் அதன்படி பின்தொடர் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காகவும் செயற்திட்டத்தினால் பொருத்தமான பொறிமுறையொன்று தாபிக்கப்பட்டிருக்கவில்லை.

**3.3 பயனற்ற கொடுக்கல்வாங்கல்கள்**

2014 செப்தெம்பர் 30 ஆந் திகதியளவில் செயற்திட்டச் செயற்பாடுகள் முடிவடைந்திருந்த போதிலும், செயற்திட்டத்தின் 42 கள உத்தியோகத்தர்களினதும் வரிசை அமைச்சுக்கு இணைப்புச் செய்யப்பட்டிருந்த ஏனைய உத்தியோகத்தர்களினதும் அம்பாந்தோட்டைக்கான ஆகாய விமான பிரயாண நோக்கத்திற்காக 2014 செப்தெம்பர் 28 ஆந் திகதி செயற்திட்டத்தினால் ரூபா 479,250 தொகை செலவிடப்பட்டிருந்தது. அம்பாந்தோட்டைக்கு ஆகாய விமானத்தில் பயணம் செய்த நோக்கம் பொருத்தமான விதத்தில் கணக்காய்விற்கு விளக்கப்பட்டிருக்கவில்லை.

**3.4 செயற்திட்டச் செயற்பாடுகளை முடிவுறுத்தல்**

செயற்திட்டச் செயற்பாடுகள் 2014 செப்தெம்பர் 30 ஆந் திகதியன்று முடிவுக்கு கொண்டுவரப்பட்டு கிராமிய வீதி ஒத்திகைக் கூறின் செயற்திட்ட முடிவுறுத்தல் அறிக்கை தயாரிக்கப்பட்டும் 2015 மார்ச் 31 ஆந் திகதியன்று நிறைவேற்று முகவருக்கு சமர்ப்பிக்கப்பட்டும் இருக்கவில்லை.